**04.02.2025**

**O.S.No.94/2022**

**வா.சா.1 : சிவக்குமார்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொர்ச்சி</u>:-**

8) ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யும் போது எனக்கும் பிரதிவாதிக்கும் பாக பிரிவினை பத்திரம் படி பாகம் பிரித்ததில் தடம் சரியாக இல்லை என்று சொல்லியுள்ளேன். பின்னிட்டு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் நீதிமன்றத்தின் மூலம் நீதிமன்ற ஆணையர் நியமித்து அறிக்கை செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நீதிமன்ற அறிக்கையில் தீர்ப்பு செய்யவதில் எனக்கு எந்தவித ஆட்சேபணை இல்லை. பாக பத்திரம் படி எனக்கு பிரிந்த பாகமும் பிரதிவாதிக்கு பிரிந்து பாகமும் சரியாக அமைந்துள்ளது என்றால் சரிதான்.

9) எனக்கு பாதையாக ஒதுக்கிய பாகத்தில் ஞானவேல் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தெரியவருகிறது. அது கல்லுக்கட்டு ஆகும். எனது சொத்தின் வடபுறத்தில் மனோகரன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தெரியவருகிறது.

10) எனக்கு பாகமாக பிரிந்து சொத்தில் பிரதிவாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு பாகம் பிரித்தது 1 ஏக்கர் 23 செண்ட். எனக்கு பிரிந்த பாகத்தில் தனியாக கிணறு மற்றும் போர்வெல், மின் இணைப்பு, கூரைவீடு உள்ளது. பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 6 செண்ட் பிரிந்தது. என்னிடம்

காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். 1 வது கையெழுத்து பிரதிவாதி உடையது. 2 வது கையெழுத்து பிரதிவாதியின் மகனுடையது. மேற்படி பஞ்சாயத்து ஒப்பந்த முச்சலிக்கா பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) மேற்படி முச்சலிக்காப்படி மேற்படி வழக்குகள் சமாதனம் ஆகிவிட்டதாகவும், அதன் படி இரண்டு வழக்குகளையும் வாபஸ் பெற்றுகொள்ளும்படி முடிவு செய்யப்பட்டது. பிரதிவாதிக்கு மின்சார வாரியத்தில் இருந்து மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது. எனது நடுகாட்டில் இருந்த மின்சார கம்பம் காட்டின் ஓரமாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி முச்சலிக்காப்படி வழக்கை முடித்துக்கொள்ளலாம் என்றால் மேற்படி பாதையில் நடக்கவிடமாட்டார்கள்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.02.04 18:30:46 +0530

**Subordinate Judge, Attur.**